# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,896 — 1931 ம் ஹூ மார்கழிமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

---

### காணிக்குத்தகை விற்பனவு.

இதன்கீழ் சொல்லப்படும் முடிக்குரிய புகையிலைக்கேற்ற காணித்துண்டுகளை 99 வருடத்துக்கு குத்தகையாக கொடுப்பதற்கு வடமாகாண ஏசண்டரவர்கள் 1932 ம் ஆண்டு தைமாசம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி மட்டும் அல்லது அதற்குமுன் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாண கச்சேரியில் ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விக்காரன் கேள்விப்பத்திரத்தில் தன் முழுப்பெயரையும் விலாசத்தையும் எழுதிக்கொடுத்து ஒவ்வொரு காணித்துண்டுகளுக்கும் நேரே குறித்திருக்கும் பிரகாரம் அளப்பனச்செலவுக் காசையும் ஏசன்றுத்துரை யவர்களிடம் கட்டினாலன்றிக் கேள்விப்பத்திரம் ஏற்கப்படமாட்டாது. அப்படிக் கட்டப்பட்ட காசு குத்தகை விற்று முடியும்வரைக்கும் அல்லது குத்தகை விற்கக்கூடாதென்று ஏசண்டுத்துரை யவர்கள் முடிவுபண்ணும் வரைக்கும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

முடிக்குரிய காணிகளின் குத்தகை விற்பனவைப்பற்றி அரசாட்சியார் ஏற்படுத்திய பிரமாணங்களுக்கமைய யாழ்ப்பாணக் கச்சேரியில் 1932 ம் ஆண்டு தை மாசம் 29 ந் தேதி முன்நேரம் 10.30 மணியளவில் குத்தகை ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரனுக்கே குத்தகை தீரும். ஆனால் அக்காணிக்கு முதல் கேள்விப்பத்திரம் கொடுத்தவரும், இந்த விளம்பரத்தின் பிரகாரம் கேள்விப்பத்திரம் கொடுத்தவர்களுமே ஏலத்தில் கேட்கலாம்.

குத்தகை நிபந்தனை பத்திரங்கள் வடமாகாண ஏசண்டுத்துரை யவர்களிடமிருந்தும் காணிகளின் படங்கள் அளவு கந்தோர் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், தீவுப்பகுதியில் வேலணை கிழக்கிலிருக்கும் முடிக்குரிய நாலு காணித்துண்டுகள்.

பிரதமபடம் 8,087. விபரம்—புகையிலை செய்கைக்குத் தகுந்த நிலம்.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. | காணித் துண்டின் அளவுச் செலவு ரூ. | ச. | காணியின் தரிப்புக் குத்தகை தொள்விலைப் பணம் ரூ. | ச. | முதல் 30 வருடத்துக்கு வருஷக் குத்தகை. முதல் 6 வருடத்துக்கு வருடக் குத்தகை ரூ. | ச. | எஞ்சிய 24 வருடத்திற்கும் வருடக் குத்தகை ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்கடவை | 1 | 0 | 7 | 6 | 0 | 13 | 0 | 4 | 33 | 13 | 0 |
| 2 | ஷை | 1 | 0 | 3 | 6 | 0 | 13 | 0 | 4 | 33 | 13 | 0 |
| 3 | ஷை | 1 | 0 | 4 | 6 | 0 | 13 | 0 | 4 | 33 | 13 | 0 |
| 4 | ஷை | 2 | 3 | 25 | 9 | 0 | 35 | 0 | 11 | 67 | 35 | 0 |

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஹூ கார்த்திகைமீ 30 ந் திகதி.

ஜீ. வீ. பிறேன்,
காணிக் கொம்மிஷனர்.

347——J. N. 15185-122 (11/31)

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்.

**ஊவா மாகாணத்தில் உவேவகமா கள்ளுத் தவறணையை 1932–33 ம் ஆண்டுக்கு வைக்கிறதோ அல்லது மூடிவதோ வென்பதறகு பிரியமிடுதல்.**

இத்தால் வெளிப்படுத்துவதாவது, ஊவா மாகாணத்தின் ஏசண்டு அவர்கள் 1928 ம் ஞூ ஆவணி மாதம் 31 ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,661 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில வெளிப்படுத்திய 180 ம் இலக்கக் கள்ளுக் கந்தோர் விளம்பரத்தாலும ;

1929 ம் ஞூ ஆடி மாதம் 12 ந திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,722 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில வெளிப்படுத்திய 187 ம் இலக்கக் கள்ளுக் கந்தோர் விளம்பரத்தாலும ;

1930 ம் ஞூ மாசி மாதம் 28 ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,764 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில் வெளிப்படுத்திய 194 ம் இலக்கக் கள்ளுக் கந்தோர் விளம்பரத்தாலும் ;

1930 ம் ஞூ புரட்டாதி மாதம் 19 ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,806 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில வெளிப்படுத்திய 202 ம் இலக்கக் கள்ளுக் கந்தோா விளம்பரத்தாலும் ;

1931 ம் ஞூ ஆனி மாதம் 19 ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,861 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில் வெளிப்படுத்திய 222 ம் இலக்கக் கள்ளுக் கந்தோர் விளம்பரத்தாலும் ;

1931 ம் ஞூ ஆவணி மாதம் 28 ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,777 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில் வெளிப்படுத்திய 225 ம் இலக்க கள்ளுக் கந்தோா விளம்பரத்தாலும்;

திருத்தம் செய்யப்பட்ட 1925 ம் ஞூ ஆவணி மாதம் 14 ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்ட 7,478 ம் இலக்க இலங்கை அரசாட்சி கெசற் பத்திரிகையில் வெளிப்படுத்திய 146 ம் இலக்க கள்ளுக் கந்தோர் விளம்பரத்தில் அடங்கியிருக்கும் பிரமாணங்களில் 6 ம் பிரமாணத்தின்படி தன்னில் தன்னில் அமைத்திருக்கும் அதிகாரத்தைக்கொண்டு பின் குறித்திருக்கும் கள்ளுத் தவறணையைத் திறப்பதற்கு உத்தரவுச்சீட்டு மறுபடியும் கொடுக்கலாமோ என்பதை அறியும்பொருட்டு அத்தவறணையின் எல்லைக்குள் சம்மதம் கொடுக்கக்கூடியவர்களில் 100 க்கு 60 வீதம் விரும்புகிறார்களோவென்று அறியும் பொருட்டு பின்சொல்லப்படும் இடத்தையும் திகதியையும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

காலை 8 மணி துவக்கம் 12 மணி வரைக்கும். மறுபடி சாயந்தரம் 1 மணி துவக்கம் 6 மணி வரைக்கும் பிரியமெடுக்கப்படும்.

எல்லைக்குள் அடங்கிய இடத்துக்கு அந்தச் சம்மதம் கொடுக்கக்கூடியவர்களின் பெயர்வழி உள்ள கடைசியான இடாப்பில் பெயரில்லாதவர் அப்படிச் சம்மதம் கொடுக்கத் தகுதியாக மாட்டார்.

| தவறணை. | தெரிவு செய்யும் திகதி. | தெரிவு செய்யும் இடம். | எல்லைகள். |
| --- | --- | --- | --- |
| உவேவகமா கள்ளுத் தவறணை | 1932 ம் ஞூ தை மாதம் 16 ந் உ | மாஸ்பன அரசாட்சியாரின் பள்ளிக்கூடம் | கலகித்தியவா, கொகில்லை, எல்லாநதை, பலகல்ல, டிம்புலான, கத்கின்டா, பண்டாரவத்லை, உவேவகமா, இலுக்வெலகமா, கல்கொத்துவா, ஙிந்திகொட, மல்வெற்றிகமா, டியபோக்கண்டுறைகமா, இடமேகமா; மெடிப்புக்குன என்னும் கிராமங்களும் அதனுள் அடங்கிய தோட்டங்களும் கேக்லீஸ், கம்பகா, பிலேற்லிமென். |

வதுளைக் கச்சேரி,
1931 ம் ஞூ கார்த்திகைமீ 23 ந் உ.

ஈ. ரீ. மில்லிங்ரன்,
அரசாட்சி ஏசண்டு, ஊவா.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.